பக்கங்கள்:-13

காலை முரசு

## யாழில் குடும்பஸ்தர் மயங்கி வீழ்ந்து சாவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – றொட்டியாலடி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மயங்கி கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார். 05

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 11 | வெள்ளிக்கிழமை | 24.01.2025 | அதிர்வு 175

மருதானை பொலிஸ் நிலையத்தில்

## கிளிநொச்சி பெண் கொலை

### சபையில் சிறீதரன் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு




கொழும்பு – மருதானை பொலிஸ் நிலையத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த 05

## வடக்கு, கிழக்கில் முப்படை வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்!

### சபையில் செல்வம் எம்.பி. வலியுறுத்து



முப்படைகள் மக்களின் காணிகளைஅபகரிக்கும்விடயத்தைஒழிக்க வேண்டும் எனவும், இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் 05

தீர்வுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலுக்கு

# கஜேந்திரகுமார் உரிய முறையில் அழைப்பு விடுத்தால் பரிசீலிப்போம்

### தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

**“புதிய அரசமைப்பு தொடர்பான தமிழ்த் தேசியக் கட்சிகளின் கலந்துரையாடலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உரிய முறையில் அழைப்பு விடுக்கப்பட்டால் அதை நாங்கள் பரிசீலிப்போம்.”**

**– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.** 05





## பாதை தவறி பயணிக்கும் அநுர அரசு

### எதிரணி சாடல்

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசு பாதை தவறிப் பயணிக்கின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் 06

புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு:

## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் மாவட்டத்தில் முதலிடம்

(ந.லோகதயாளன்)



2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் 186 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் 05



அரிசித் தட்டுப்பாடு நீடிக்கிறது. அதனால் வழமைக்கு மாறாகப் பெருமளவு அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்தத் தடவையும் பெரும் போகம் காலை வாரக்கூடிய நிலைமை தென்படுகிறது. பல இடங்களிலும் விளைந்த வயல்கள் வெள்ளத்தினால் அழியும் இக்கட்டு.

இம்முறை தமிழ் – சிங்களப் புது வருடம் அரிசிப் பற்றாக்குறையுடன்தான் பிறக்கும் என்று தோன்றுகின்றது.

அந்தச் சமயத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல் வர இருப்பதால் வயிற்றைக் கடிக்கும் பசி வாக்குச்சீட்டிலும் எதிரொலிக்கும் என்று நம்பலாம்.

அரிசி இறக்குமதியால் நாட்டுக்குப் பெரு நட்டம் – பாதிப்பு – என்றாலும் ஒரு வகையில் அரசுக்கு கொண்டாட்டம்தான். அண்மைக்காலத்தில் ஒரு லட்சத்து 67,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்த வகையில் 1,090 கோடி ரூபா அரிசி இறக்குமதி வரியை அரசாங்கம் பெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. 05

# ஓட்டோவில் நாடாளுமன்றம் சென்ற வன்னி மாவட்ட எம்.பி ஜெகதீஸ்வரன்





**(கி.வசந்தன்)**

சாதாரண மக்களைப் போல் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் ஓட்டோவில் நாடாளுமன்ற அமர்வுக்குச் சென்றார்.

வவுனியாவில் இருந்து பஸ்ஸில் கொழும்பு சென்ற அவர், அங்கு தனது விடுதியில் இருந்து நேற்று வியாழக்கிழமை காலை ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் நாடாளுமன்றம் சென்று சபை அமர்வில் கலந்துகொண்டார்.

ஆடம்பரமின்றி மக்களைப் போல் மக்களது துன்பங்களை உணர்ந்தவனாக இவ்வாறு நாடாளுமன்றம் சென்றதாக அவர் தெரிவித்தார்.

## மானிப்பாய் பொலிஸார் அதிரடி:

# உடுவில் பிரதேசத்தில் 330 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைதானார்!




**(எஸ். நிதர்ஷன்)**

உடுவில் பிரதேசத்தில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று மானிப்பாய் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு பெருமளவிலான கோடா மற்றும் கசிப்புடன் உற்பத்தி செய்யும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று (23) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் சிறப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.ஜே. குணதிலக தலைமையிலான விசேட பிரிவினரால் இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

உடுவில் பிரதேசத்தில் மல்வம் பகுதியில் இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்கி வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர் .

இந்த முற்றுகை நடவடிக்கையின் போது 330 லீற்றர் கோடா, 15 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள், தயாரிக்க பயன்படுத்தும் சில உபகரணங்கள் உள்ளிட்டவை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் போது 39 வயதுடைய அதே பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கோடா, கசிப்பு மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்களுடன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.




# ரயில் ஈ-டிக்கெட் மோசடி தொடர்பாக 3 பேர் கைது

எல்ல – ஒடிசி ரயிலில் இடம் பெற்ற ஈ-டிக்கெட் மோசடி தொடர்பில் ரயில்வே திணைக்களத்தின் தொழில் நுட்ப பிரிவு அதிகாரி ஒருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொழிநுட்ப பிரிவு அதிகாரி 92 ஈ டிக்கெட்டுக்களுடன் திருகோணமலையில் நேற்று கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி டிக்கெட்டுக்களை வெளிநாட்டினருக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார் என சந்தேக நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதனுடன் தொடர்புடைய மேலும் இருவர் கண்டி மற்றும் மாத்தளை பகுதிகளில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.




# கொழும்பு – கண்டி பிரதான வீதியில் பயணிக்கும் சாரதிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு - கண்டி பிரதான வீதியூடான வாகன போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகளை இன்று இரவு 8.30 முதல் நள்ளிரவு 12 மணி வரையான காலப்பகுதியில் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த காலப்பகுதியில் நிட்டம்புவ ஸ்ரீவிஜேராம விகாரையின் வருடாந்த பெரஹெர ஊர்வலம் நடைபெறவுள்ளதால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நிட்டம்புவ அத்தனகல்ல வீதி களுவாகஸ்வில ஸ்ரீவிஜயராம விகாரையில் ஆரம்பமாகும் பெரஹெர நிட்டம்புவ நகரை அடைந்து இடது புறமாக திரும்பி கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கொழும்பு திசை நோக்கி பயணித்து வல்வத்த சந்தியில் வலதுபக்கமாக வித்யாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீபே-ரதி விகாரையை சென்றடையவுள்ளது.

பெரஹெராவில் கலந்துகொள்வதற்காக பெருமளவானோர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் கண்டி - கொழும்பு பிரதான வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படலாமென்பதால் இந்த காலப் பகுதியில் நிட்டம்புவ நகரம் முதல் மல்வத்த சந்தி வரை கொழும்பு மற்றும் கண்டி நோக்கி பயணிக்கும் திசையில் ஒருவழிப் போக்குவரத்தாக மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக புதியவரை நியமிக்குமாறு கோரிக்கை




பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் பதவிக்கு உரிய அதிகாரியொருவரை சட்டரீதியாக நியமிக்குமாறு, இலங்கை கல்வி நிர்வாக சேவை நிபுணர்கள் சங்கம் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கோரியுள்ளது.

ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவிக்கு 6 மாத சேவை நீடிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் அந்த காலம், அடுத்த மாதம் நிறைவடையவுள்ளதாகவும் அந்த சங்கம் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

தற்போது, பதவியில் உள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சேவை நீட்டிப்பு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாக அறியமுடிகிறது.

இந்தநிலையில், அவ்வாறான நடவடிக்கைகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை நிபுணர்கள் சங்கம் எதிர்ப்பினை வெளியிடும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், மேற்படி பதவிக்கு அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் உள்ளனர் எனவும் அந்தப் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் உரிய அதிகாரியை நியமிக்க வேண்டும் என இலங்கை கல்வி நிர்வாக சேவை நிபுணர்கள் சங்கம் கல்வியமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரியவை வலியுறுத்தியுள்ளது.



# 167 சந்தேகநபர்கள் 10 நாள்களில் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் கடந்த 10 நாள்களில் குற்றச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டனர் என கூறப்படும் 167 சந்தேகநபர்களும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 2561 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த காலப்பகுதியில் 3 ரி- 56 ரக துப்பாக்கிகளும் 03 கைத்துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது கடந்த 10 நாள்களில் 462 கிலோகிராம் கேரள கஞ்சாவும் 15 கிலோகிராம் ஹஷிஸ் போதைப்பொருளும் 08 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டு மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதே இத்தகைய சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படுவதன் முக்கிய நோக்கமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரிசி, உப்பு, தேங்காய் என்று அத்தியாவசிய பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையும், அதனால் அவை இறக்குமதி செய்யப்பட்டு அதிக விலையில் விற்கப்படுகின்றமையும் உள்ளூராட்சி தேர்தலில் ஆளும்தரப்புக்கு நெருக்கடியாக மாறும் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு எதிராக முன்னாள் ராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தொடுத்த வழக்கில், 'விசாரணைக்கு முந்திய கலந்துரையாடலுக்கு' நேற்று வருகை தரத் தவறிய வழக்காளியான பிள்ளையானுக்கு நேற்றைய வழக்குச் செலவுத் தொகையாக 50 ஆயிரம் ரூபாவை எதிராளியான சாணக்கியன் எம்.பிக்கு வழங்கும் படி கல்கிசை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

நேற்று நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த விசாரணைக்கு முந்திய கலந்துரையாடல் இனி பிறிதொரு தினத்தில் திகதி நிர்ணயித்து நடத்தப்படும்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையானைச் சம்பந்தப்படுத்தி மட்டக்களப்பில் சாணக்கியன் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றை ஒட்டி இந்த மான நஷ்ட வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கின்றது.

சாணக்கியனின் சொந்த இடம் மட்டக்களப்பும் சம்பந்தப்பட்ட செய்தியாளர் மாநாடு மட்டக்களப்பில் தான் நடைபெற்றது. கொழும்பில் எம்.பி. என்ற முறையில் சாணக்கியன் தங்கியிருக்கும் பிரதேசம் கல்கிசை மாவட்ட நீதிமன்றத் திற்குள் வரமாட்டாது. இந்தப் பின்புலத்தில் இந்த வழக்கு பிழையான நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்யப்படுவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

+ + +

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் ஆளும் தரப்பைச் சேர்ந்த அமைப்பாளர் ஒருவர் மதுச்சாலை ஒன்றில் மதுபோதையில் நேற்று மாலை நடத்திய அட்டகாசத்தை அடுத்து உள்ளூர் தரப்பினரால் நையப் புடைக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிகிறது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

மலிந்தால் விடயம் சந்தைக்கு வரும், அப்போது பார்க்கலாம்......!

---

## கஜேந்திரகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பில் எந்தவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை. அரசமைப்பு வரைபு கலந்துரையாடல் மற்றும் கட்சிகளோடு பேசுவதற்கு ஏழு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டாலும் கூட கஜேந்திரகுமார் அழைத்த கூட்டத்தில் பங்குபற்றுவது தொடர்பில் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படவில்லை. ஆனபடியால் அதில் எமது கட்சியினர் கலந்து கொள்வார்களா என்று எனக்கு எதுவும் தெரியவில்லை. ஒரு முடிவு இல்லாதபடியால் அநேகமாகக் கலந்துக்கொள்வதற்கு சாத்தியங்கள் குறைவு என்றுதான் நினைக்கிறேன். ஆனாலும், ஒரு சிலர் சென்று கலந்துகொள்கின்றார்களோ என்பதும் எனக்குத் தெரியாது.

உண்மையில் பங்கேற்பதா? இல்லையா? என்று எந்த முடிவும் கட்சியினால் எடுக்கப்படவில்லை.

கஜேந்திரகுமாரின் அழைப்பை நாங்கள் நிராகரிக்கவில்லை. எதிர்க்கவும் இல்லை. ஆனால், காலப் போக்கில் பரிசீலிக்கலாம் என்ற முடிவோடுதான் இருந்தோம். ஆனால், 25 ஆம் திகதி கூட்டம் தொடர்பாக தெளிவாகத் தெரியவில்லை.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக நான் இருந்தாலும் கூட்டம் தொடர்பில் அறிவிப்போ, அழைப்போ எனக்குக் கிடக்கவில்லை. இதேபோன்று எமது கட்சியின் பொதுச்செயலாளருக்கும் அழைப்பு கிடைத்ததோ என்று எனக்குத் தெரியவில்லை.

சிறீதரன் எம்.பியிடம்தான் குறித்த விடயம் கதைக்கப்பட்டது. அவரும் எம்முடன் இது பற்றி பேசியிருந்தார். ஆனாலும், கட்சிக்கு உரிய அழைப்பு விடுக்கப்பட்டால் இதை நாங்கள் பரிசீலிக்கலாம். அதற்காகத்தான் குழு ஒன்றும் நியமிக்கபட்டுள்ளது. அப்படி அழைப்பு விடுக்கப்பட்டால் இதை நாங்கள் நிச்சயம் பரிசீலிப்போம்." - என்றார்.

---

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இந்த விடயத்துக்கான நீதியை உடனடியாகப் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைப் பிரஸ்தாபித்தார்.

அதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து பதிலளிப்பதாகத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க மானப்பெரும கருத்துத் தெரிவிக்கையில்,

"மருதானை பொலிஸ் நிலையத்தில் தற்கொலை சம்பவமொன்று பதிவாகியிருந்தது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பெண் அதிகாலை 4 மணிக்கும் 4.30 மணிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியிலேயே தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவே ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. அதற்கு அமையவே கொலையா, தற்கொலையா என்ற முடிவுக்கு வர முடியும்.

இருப்பினும் இதுவரையில் கிடைக்கப் பெற்ற ஆதாரங்களுக்கு அமைய

மேற்படி பெண் தற்கொலை செய்துள்ளமையே தெரியவந்துள்ளது.

இந்தப் பெண்ணின் மீது போதைப் பொருள் பாவனை குறித்த பிடியாணையுள்ளமையும் குறிப்பிடத்தக்கது." - என்றார்.

## யாழ்.இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெறுபேறு நேற்று மாலை வெளியாகியது. இதில் இதுவரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் பரமேஸ்வரன் பிரசோதன் 186 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் சாதனை படைத்துள்ளார்.

இதேநேரம் யாழ். தொன் பொஸ்கோ மாணவன் 185 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

---

## யாழில் குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செட்டிவளவு, இணுவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை நித்தியானந்தம் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வேளை கீழே மயங்கி வீழ்ந்துள்ளார். இதன்போது அந்த வீதியால் வந்தவர்கள் அவரைத் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பத்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

---

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு அழைத்த விடயத்தைத் தாம் வரவேற்பதாகவும் கூறினார்.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் அரசு முன்னெடுத்துவரும் நல்ல விடயங்களுக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று வியாழக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"முன்னாள் ஜனாதிபதிகளின் வாசஸ்தலங்கள் தொடர்பில் அரசு எடுத்திருக்கும் தீர்மானங்களை நாம் வரவேற்கின்றோம்.

இவ்வாறான அரசின் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டும். எதிர்வரும் தேர்தலுக்கான யுக்தியாக இந்த விடயங்கள் அமைந்து விடக்கூடாது.

தூய்மையான ஒரு திட்டத்தை முன்னெடுக்கும்அரசுபலதரப்பட்டவிடயங்களில்கவனம் செலுத்தும்போதே இந்தத் திட்டத்தில் வெற்றியடைய முடியும்.

வடக்கு,கிழக்கில் உள்ள மக்களின் காணிகளை முப்படையினர் அபகரித்துள்ளனர். எனவே, முப்படைகள் மக்களின் காணிகளை அபகரிக்கும் விடயத்தை ஒழிக்க வேண்டும். இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

இவற்றை நடைமுறைப்படுத்துமிடத்து கிளீன் ஸ்ரீலங்கா எனும் திட்டம் மேலும் வளர்ச்சியடையும்." - என்றார்.

# சித்திரைப் புதுவருடத்தில் மீண்டும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் நிலை

## சாணக்கியன் எம்.பி சுட்டிக்காட்டு




எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ் – சிங்கள புத்தாண்டின் போது நாட்டில் மற்றுமொரு அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான நிலைமை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்ட தரவுகளில் பிழைகள் காணப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அந்த தரவுகளுக்கு அமையவே அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அங்காடிகளில் கூட சிவப்பு அரிசி காணப்படவில்லை.

ஆகவே, இந்த விடயத்தை வேடிக்கையாக எடுத்துக் கொண்டு அரிசி தட்டுப்பாடு இல்லையென்று கூறாதீர்கள்.

இந்த விடயம் தொடர்பில் உரிய முறையில் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுங்கள். இல்லையெனில், எதிர்காலத்தில் பாரியளவிலான நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.” – என்றார்.

# யாழில் மூச்சு எடுக்கச் சிரமப்பட்ட இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் மூச்சு எடுப்பதற்குச் சிரமப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மூளாய் – வேரம் பகுதியைச் சேர்ந்த தர்சன் பாமினி (வயது 36) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி குடும்பப் பெண்ணுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. உடனே அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.



நாட்பட்ட நுரையீரல் அடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

## பாதை தவறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:–

“அரிசி, தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குகே கையேந்தும் நிலையை இந்த அரசு உருவாக்கியுள்ளது.

மாற்றம் என்று கூறி வந்த இந்த அரசு, வாக்களித்த மக்களை ஏமாற்றி வருகின்றது.

தேர்தல் காலங்களில் தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவை என்பதை அநுர அரசு தற்போது நிரூபித்து வருகின்றது.

இந்த அரசு பாதை தவறிப் பயணிக்கின்றது என்பதே உண்மை. பாதை தவறிப் பயணித்த கோட்டா அரசுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பதை அநுர அரசு நினைவில் கொள்ள வேண்டும்.” – என்றார்.




# நாடாளுமன்ற உணவுகளுக்கான விலையை அதிகரிக்க தீர்மானம்

நாடாளுமன்ற உணவகத்தில் உணவை பெற்றுக்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அறவிடப்படும் கட்டணத்தை 1,550 ரூபாவினால் அதிகரிப்பதற்கு நேற்று கூடிய சபை குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, புதிய விலைகள் அடுத்த வாரம் முதல் அமுலுக்கு வரும் என அந்த குழுவின் உறுப்பினரான பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரையில் காலை உணவுக்காக அறவிடப்பட்டுவந்த 100 ரூபா கட்டணம் 600 ரூபாவாகவும், மதிய உணவுக்கு அறவிடப்பட்ட 300 ரூபா 1,200 ரூபாவாகவும், தேநீருக்கான கட்டணம் 50 ரூபாவிலிருந்து 200 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இதுவரையில் காலை உணவு, மதிய உணவு மற்றும் தேநீருக்காக அறவிடப்பட்டுவந்த, 450 ரூபா கட்டணம் 2,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட நால்வர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்




குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிப்பதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நீண்ட பரிசீலனைக்குப் பின்னர் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதன்படி, சந்தேக நபர்கள் ஒவ்வொருவரையும் தலா 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், சந்தேக நபர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதித்த நீதிமன்றம், அவர்களின் கடவுச்சீட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டது.

அதன்படி, முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, அவரது பிரத்தியேக செயலாளர் தம்மிகா ஷிராணி சுமனரத்ன, கனியவள கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் எஸ்.அமரசேகர மற்றும் அமைச்சரின் இணைப்புச் செயலாளராகப் பணியாற்றிய அனுர செனவிரத்ன ஆகியோரை பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் பிங்கிரிய மற்றும் நாரம்மல ஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென, கனியவள கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான சுமார் 6,146,000 ரூபா நிதியை பெற்று, அதனை 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு பயன்படுத்திய குற்றச்சாட்டில் மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொருளாதார ஆபத்து

கடந்த வருட இறுதியில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆலியவற்றின் முடிவுகளின் அடிப்படையில் நாட்டின் அரசியல் கட்டமைப்பே புதிய நிலை மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றது என்ற விடயத்தைக் குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அதன் தொடராக நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின்றது என்றும் எச்சரித்து இருக்கின்றார்.

நேற்று யாழ்ப்பாணத்தில், யாழ் ஊடக அமையத்தில் தான் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்த விடயங்களை விவரமாக விளக்கி இருக்கிறார். இன்றைய நிலையில் அவதானிக்கப்படவேண்டிய ஒரு முக்கிய விவகாரம் இது.

அரசியல் சூழ்நிலை மாற்றத்தை அடுத்து நாம் கவனிக்க வேண்டிய இரண்டு விடயங்களை அவர் குறிப்பிடுகிறார்.

ஒன்று - ஜனாதிபதியின் உள்ளுணர்வு முனைப்புடனானகூர்மையானசெயற்பாடுகள், நடவடிக்கைகள்.

அடுத்தது - ஜனாதிபதியின் முதல் நூறு நாள் பதவிக்காலத்தின் பெறுபேறுகள்.

இவற்றை நோக்கும் போது புதிதாக எதுவுமே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவினால் முன்னெடுக்கப்படவேயில்லை என்பதைச்சுட்டுகின்றார்சம்பிக்கரணவக்க. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகள், போக்குகள், ஏற்பாடுகள் அப்படியே மாற்றம் இன்றி தொடர்வதை தவிர, வேறு புதிய ஆக்கபூர்வமான முனைப்புகள், முயற்சிகள் எவையுமே இல்லவே இல்லை என்று உறுதிபடக் கூறுகிறார் ரணவக்க.

இந்தப் போக்கு மிக ஆபத்தான விளைவைத் தரக்கூடியது என்ற எச்சரிக்கையையும் அவர் வெளிப்படுத்துகிறார்.

சரியான திட்டங்கள், சரியான செயல்பாடுகள் இல்லாமல் இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து - வங்குறோத்து இக்கட்டிலிருந்து - நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது என்பதை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

நாட்டை மேம்படுத்தி வளர்ப்பதற்கான நகர்வுகள் இல்லாவிட்டால் மிக மோசமான நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

நாடு இப்போது பொருளாதார நிலையில் மூச்சு விடுகின்றது என்றாலும், சர்வதேச நாடுகளுக்கு வழங்க வேண்டிய - மீளச்செலுத்த வேண்டிய - கடன் தொகையை அது இன்னும் செலுத்தத் தொடங்கவில்லை. 2028 வரை அதற்கான கால அவகாசத்தைப் பெற்றிருக்கிறோம். ஆனால் அந்த 2028இக்கு முன்னர் நாம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்து, நிலுவையில் இருக்கும் கடன்களை மீளச் செலுத்தத் தயாராகி விட வேண்டும் என்று சுட்டிக் காட்டும் சம்பிக்க ரணவக்க அதற்குரிய வளர்ச்சியை - விருத்தியை - அபிவிருத்தியை - நாடு எட்டாவிட்டால் மீண்டும் அந்தப் பின்னடைவில் - பொருளாதார நெருக்கடியில் - மூழ்கி, வங்குறோத்து நிலையை அடைந்து, நாடு திரும்பவும் மீண்டெழ முடியாத மோசமான கட்டத்துக்குப் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்று யாழ்ப்பாணத்தில் வைத்து எச்சரிக்கை விடுத்திருக்கிறார் அவர்.

உண்மைதான். இப்போது பொருளாதார ரீதியில் மூச்சு விட்டாலும், பொருளாதார மேம்பாட்டை நோக்கி நாட்டை இந்த அரசு நகர்த்துவதான சாத்தியமே தென்படவில்லை. ரணில் போட்ட தண்டவாளத்தில் நாட்டை மேம்போக்காக இந்த அரசு நடத்திச் செல்வது இப்போதைய நிலையில் ஆறுதலான விடயமாகத் தோன்றினாலும், எதிர்காலத்தில் மிக மோசமான பாதிப்புக்கு அது வழி கோலி விடும்.

சரியான பொருளாதார இலக்குகளை அடையாளம் கண்டு, அவற்றை நோக்கி நாட்டை விரைந்து நகர்த்துவதற்கான திசையில் தன் பணிகளை புதிய ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும். ஆனால் அப்படி அவர் செயற்படுபவராகத் தெரியவில்லை.

இந்த மெத்தனப் போக்குத் தொடருமானால், சம்பிக்க ரணவக்க எச்சரித்தமை போல மீண்டும் நாடு மீள முடியாத பொருளாதார வீழ்ச்சிக்குள் மூழ்குவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# 2026ஆம் ஆண்டு முதல் கல்வி முறையில் மாற்றம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய சபையில் அறிவிப்பு



பாடத்திட்டங்கள், பரீட்சை முறைமை உள்ளிட்ட புதிய கல்வி சீர்திருத்தங்கள் 2026 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று கலந்து கொண்டு பிரதமர் இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

முந்தைய அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்ட கல்வி சீர்திருத்த திட்டங்களில் நேர்மறையான மாற்றங்களைச் செய்ய எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள கல்வி முறையை மாணவர் சமூகத்திற்கு மிகவும் பொருத்தமான வகையில் மாற்றுவதன் மூலம் கல்வி சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

அழகியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கியல் போன்ற பாடங்களின் உள்ளடக்கத்தை மிகவும் பொருத்தமானதாக மாற்ற தாம் விரும்புவதாகவும், அந்தப் பாடங்களை ஒருபோதும் நீக்க எதிர்பார்க்கவில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.


கல்வியில் போட்டித்தன்மையைக் குறைக்கும் நோக்கில், 2026 ஆம் ஆண்டு முதல் கல்விச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாகவும், பரீட்சை முறை மற்றும் பாடத் திட்டத்தை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு

இந்த வருடத்தின் முதல் 3 வாரங்களில் மட்டும் நாட்டில் 3,499 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, முதல் 3 வாரங்களில் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதோடு, அதன் எண்ணிக்கை 1,576 எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் 22 அதிக ஆபத்துள்ள டெங்கு சுகாதார அதிகாரி பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டில் டெங்கு நோயால் இரண்டு நோயாளிகள் இறந்துள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.




# கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கு இணையவழி முறையில் முன்பதிவு




கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கு இணையவழி முறை மூலம் ஒரு திகதியை முன்பதிவு செய்து, குறித்த திகதியில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

யாரேனும் ஒருவர் நேற்றைய தினம் திகதியை முன்பதிவு செய்தால், அவர்களுக்கு ஜூன் 27 ஆம் திகதி கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும் என தெரிவித்தார் .

இணையவழி முறைமைக்கான திகதி, 05 மாதங்களுக்கு முன்பே ஒரு திகதியில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஒதுக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அவசர தேவையுடையவர்களுக்கு, அவர்களுடைய தேவையைக் கருதி கடவுசீட்டுக்களை பெறுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பழனிசாமி ஒரு அரசியல் வியாபாரி; அமைச்சர் செந்தில் பாலாஜி விமர்சனம்



எடப்பாடி பழனிசாமி ஒரு அரசியல் வியாபாரி எனவும் அவர் தனது சுயநலத்திற்காக தமிழ்நாட்டையே பா.ஜ.க.விடம் அடமானம் வைத்திருந்தார் என்றும் அமைச்சர் செந்தில் பாலாஜி தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தரையே தேயும் அளவுக்கு ஊர்ந்து சென்று காலைப் பிடித்து முதல்வராகி பதவி சுகம் கண்டவுடன் அந்த கால்களையே வாரிவிட்டவர் எடப்பாடி பழனிசாமி. அவர் அரசியல் விஸ்வாசம் பற்றி எமக்கு வகுப்பெடுக்கின்றார்.

பழனிசாமி தனிப்பட்ட வகையில் எத்தனை பேருக்கு துரோகம் செய்தார் என்ற கணக்கை கூட விட்டுவிடலாம். தனது பதவி நிலைத்திருக்க வேண்டும் எனும் சுயநலத்திற்காக தமிழ்நாட்டையே பா.ஜ.க.விடம் அடமானம் வைத்தார் என்பதை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவர்.

புளிமூட்டையில் ஆரம்பித்து அரசியல் வரை எல்லாவற்றையும் எந்தவொரு அறமும் இன்றி வெறும் வியாபாரமாகவே பார்க்கும் வியாபாரி பழனிசாமி, எப்படியான அரசியல் வியாபாரி என்பது அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கு மிக நன்றாக தெரியும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் செந்தில் பாலாஜிக்கு அமைதிப்படை அமாவாசை என்ற பெயர் பொருத்தமானது எனவும், ஐந்து கட்சிகளில் இருந்துவிட்டு இப்போது தி.மு.கவிற்கு வந்துள்ளார் எனவும் இனிமேல் எந்த கட்சிக்கு செல்வார் என்பது தெரியாது என்றும் எடப்பாடி பழனிசாமி விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகா கும்பமேளா விழாவில் வைரலானார் மோனாலிசா



இந்தூரைச் சேர்ந்த மாலை விற்பனையாளரான மோனாலிசா போஸ்லே (Monalisa Bhosle) பிரயாக்ராஜில் நடந்த 2025 ஆம் ஆண்டுக்கான மகா கும்பமேளா விழாவின் போது எதிர்பாராத விதமாக புகழ் பெற்றதைத் தொடர்ந்து சமூக ஊடகங்களில் வைரலானார்.

அவர் தற்போது போலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர் சனோஜ் மிஸ்ராவின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

மிஸ்ரா மோனாலிசாவை அவரது திரைப்படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க பரிசீலித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்ஸ்டாகிராம் பயனர் ஒருவர் கும்பமேளா விழாவில் மாலைகள் மற்றும் ருத்ராட்சம் விற்கும் மோனாலிசாவின் வீடியோவை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்த பின்னர், இணைய நட்சத்திரமாக அவரது பயணம் தொடங்கியது.

அவரது தனித்துவமான வசீகரிக்கும் கண்கள் மற்றும் தனித்துவமான தோற்றத்தால் பார்வையாளர்களை கவர்ந்து காணொலி விரைவில் வைரலானது.

இவரது அழகை வர்ணித்து பலரும் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

குறிப்பாக பலர் லியோனார்டோ டா வின்சியின் புகழ்பெற்ற கலைப்படைப்பான மொனாலிசா ஓவியத்துடன் ஒப்பிட்டும் பதிவிட்டுள்ளனர்.

தற்சமயம் அவர் பிரபலமான நிலையில் கும்பமேளாவிற்கு சென்ற பலரும் மோனாலிசாவை தேடியுள்ளனர். அவரை கண்டதும் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

எனினும், இதுபோன்ற நிகழ்வுகள் அதிகம் நடைபெற்றதால் மோனாலிசா மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார்.

இணையத்தில் வெளியான ஒரு காணொலி , அவர் பல ஆண்களால் துன்புறுத்தப்படுவதைக் காட்டுகிறது.

அந்த காணொலியில் அவர் சிவப்பு நிற சல்வார் உடையணிந்து, தன்னை நெருங்கும் கூட்டத்திலிருந்து தப்பிக்க முயற்சிப்பதைக் காட்டுகிறது.

அவருடைய குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் அவளை பாதுகாப்பாக அழைத்துச் செல்கிறார், இன்னும் சிலர் நெருங்கி பழகவும் , புகைப்படம் எடுக்கவும் முயற்சி செய்கிறார்கள்.

அவள் கீழே அமர்ந்து துப்பட்டாவினால் முகத்தை மறைப்பதுடன் குறித்த வீடியோ முடிகிறது.

மோனாலிசா தொடர்பில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் காணொலிகள் தொடர்ந்து பகிரப்படுகின்றன.

அவர் மாலைகளை விற்பது முதல் அவரது பிறந்தநாளை தனது குடும்பத்துடன் கொண்டாடுவது வரை பேட்டி கொடுப்பது வரை பல காட்சிகள் உள்ளன.





# அமெரிக்காவில் தீவிர பனிப்புயல்: 13 பேர் பலி; மின்சாரம் துண்டிப்பு

அமெரிக்காவில் கடந்த சில நாள்களாக வீசிவரும் பனிப்புயல் காரணமாக 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடந்த சில நாட்களாக பனிப்புயல் வீசி வருகின்றது. குறிப்பாக டெக்சாஸ், லூசியானா, மிசிசிப்பி, அலபாமா, ஜார்ஜியா, தென் கரோலினா மற்றும் புளோரிடா மாகாணங்களின் பல பகுதிகளில் 10 அங்குலம் அளவிலான பனிப்பொழி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 62 ஆண்டுகளில் இல்லாத வகையில், பனிப்புயல் பாதிப்பால் 2,100 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அடர்பனியால் டெக்சாஸ் மற்றும் ஜார்ஜியா மற்றும் மில்வாகீ, புளோரிடா உள்ளிட்ட அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நான்கு மாநிலங்களில் 1,20, 000 இற்கும் மேற்பட்டோருக்கு மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், கடுமையான பனிப்பொழிவால் வீதி மற்றும் விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புளோரிடா, லூசியானா மாகாணங்கள் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனால் அந்த நாட்டின் பாடசாலை, கல்லூரிகள் மூடப்பட்டன, வீதி மற்றும் ரயில் போக்குவரத்து பொதுசேவை குறைக்கப்பட்டது.



# லொஸ் ஏஞ்சலிஸில் மீண்டும் காட்டுத்தீ!

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸ் பகுதியில் மீண்டும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதால், பல்லாயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வலியுறுத்தப்பட்டுள்ளனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே பகுதியில் சமீபத்தில் 2 மிகப் பெரிய காட்டுத்தீ சம்பவங்கள் அரங்கேறிய நிலையில், தற்போது மீண்டும் காட்டுத்தீ பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காஸ்டாயிக் ஏரியின் அருகில் உள்ள மலைப்பகுதியில் வேகமாகப் பரவிய காட்டுத்தீ, கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்குள் 8,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பலத்த காற்று காட்டுத்தீயின் தீவிரத்தை அதிகப்படுத்த, அந்தப் பகுதி முழுவதும் புகை சூழ்ந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாகப் பரவி வரும் காட்டுத்தீ காரணமாகச் சாண்டா கிளாரிட்டா அருகில் அமைந்துள்ள ஏரியைச் சுற்றி வசிக்கும் 31,000 பேரை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், ஹெலிக்காப்டர்கள் மற்றும் விமானங்கள் மூலம் தீயணைப்புத் துறையும், ஏஞ்சலிஸ் தேசிய வனப் பகுதியைச் சேர்ந்த குழுவினரும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.01.2025




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நல்ல இசையைக் கேட்பதன் மூலம் உங்கள் மனதை மகிழ்ச்சியாக வைத்திருக்கலாம். உணர்ச்சி வசப்படாமல் இருங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற யதார்த்தமான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். சகஜமான அணுகுமுறையை கையாளவும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். பணத்தட்டுப்பாடு இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் தொந்தரவுகள் காணப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று அதிர்ஷ்டங்கள் நிரம்பிய நாளாக இருக்கும். உங்கள் தனித்திறமை மற்றும் உற்சாகத்தின் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். இதனால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அந்த வாய்ப்புகளை வெற்றிகரமாக பயன்படுத்துவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் நல்ல விஷயங்கள் நடக்கும். உங்கள் துணையுடன் பயனுள்ள நேரத்தை கழித்து மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடுவீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்விற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் சம்பளம் உயரும்.

இன்று எந்தவிதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது. நீங்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சாதகமான விளைவுகள் காணப்படாது. அதிர்ஷ்டத்தை விட உங்கள் சுய முயற்சியில் நம்பிக்கை வையுங்கள். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று இறுக்கமான பணிச் சூழல் காணப்படும். அமைதியான நிலை காணப்படாது. உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுங்கள்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் உறவைப் பாதிக்கும். அமைதியாக இருந்து எதையும் சகஜமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பண வருவாய் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களை கவலைப்பட வைக்கும்.

இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் மனதில் பதட்டம் உண்டாகும்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் அதனை நீங்கள் சமாளிக்கலாம். நீங்கள் பல பணிகளில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. மேலும் தவறுகள் நேராமல் இருக்க உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

தற்புகழ்ச்சிகளை தவிர்க்க வேண்டும். வார்த்தைகள் கவனமின்றி உதிர்க்கும் வாய்ப்புள்ளதால் அமைதியாக இருக்க வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிக்க பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளித் தொந்தரவுகள் காணப்படும்.




தேவையில்லாத மனக் கவலைகள் வருத்தத்தை அளிக்கும். அம்மாதிரியான கவலைகளை தவிர்ப்பது நல்லது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவது நல்லது.

பணி இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மனக் குழப்பங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

பணப் புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்பு காணப்படும். இது ஏமாற்றத்தை தரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை நோக்கி நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். சரியாக திட்டமிட்டால் இன்று வெற்றி காணலாம்.

உங்கள் பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். இனிமையான சூழல் காணப்படும். பணியை விரும்பி செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இனிமையான வார்த்தைகளைப் பேசி உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை நல்ல விஷயங்களுக்காக பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எதிர்பாராத வெற்றிகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். விருந்தாளிகள் வருகை மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் பணி சலிப்பை தருவதாக உணர்வீர்கள். இறுக்கமான வேலை காரணமாக பணிகள் நிலுவையில் இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவு நல்லுறவாக காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வடிவில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். சிறந்த தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று சவால்களை பொறுமையுடன் கையாள வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திப்பதை தவிர்த்து ஆக்க பூர்வமாக தெளிவுடன் சிந்தியுங்கள்.

அதிக வேலை காரணமாக தவறுகள் ஏற்படலாம். கவனமாக பணிகளை கையாள வேண்டும். பணிகளை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும்.

இன்று உங்களிடம் உணர்ச்சிவசப்பட்ட அணுகுமுறை காணப்படும். இது புரிந்துணர்வை பாதிக்கும். அமைதியாக நட்பான அணுகுமுறை தேவை.

இன்று பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்களின் பிரியமான ஒருவருக்காக நீங்கள் செலவு செய்ய நேரலாம்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்கள் தொடைகளில் வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.01.2025




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். ஏற்படும் சவால்களை அமைதியுடன் மேற்கொள்ளவும்.

பணிகளை முடிப்பதற்கான உங்கள் திட்டங்கள் செயல் வடிவம் பெறும். உங்கள் சக பணியாளர்களை விட நீங்கள் நன்கு பணியாற்றுவீர்கள்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையை சமாளிப்பது கடினம். நீங்கள் உங்கள் எல்லா வேறுபாடுகளையும் ஒதுக்கி விட்டு நட்புடன் பழக வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் ஏற்படும். இன்று உங்களால் சேமிக்க இயலாது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் நற்பலன்களை அள்ளித் தரும். இன்று உங்கள் தன்னம்பிக்கை உயரும் வகையில் மாற்றங்கள் ஏற்படும். முக்கியமான முடிவுகளை கவனமாக எடுக்கவும்.

உங்கள் சக பணியாளர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வதாக உணர்வீர்கள். அவர்களை பொறுமையுடனும் திறமையுடனும் கையாள வேண்டும்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு விழா பற்றிய விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள். அதனை நடத்துவதற்கு பெரியவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை அவர்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சுய தேவைகளுக்காக பணத்தை பயன்படுத்துவீர்கள்.




இன்று அதிர்ஷ்டகரமான நாள். கடினமான செயல்களையும் உங்கள் திறமை மூலம் எளிதாக முடிப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அது நற்பலகளைத் தரும். நீங்கள் திறம்பட செயலாற்றுவீர்கள். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருப்பதாக உணர்வீர்கள். இன்று போதிய அளவு பணம் சம்பாதிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் நேர்மறையான சிந்தனை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமையாது. உங்கள் தினசரி நவடிக்கையில் கவனமாக இருக்க வேண்டும். பிரச்சினைகளைத் தவிர்க்க உரையாடுவதற்குமுன்ஒன்றுக்குஇரண்டு முறை யோசித்து உரையாட வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மன ஆறுதலைத் தரும்.

உங்கள் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவீர்கள். இதனால் வேலை இழக்க நேரலாம். எனவே எச்சரிக்கையாக செயல்படுவது சிறந்தது.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். உங்கள் உணர்சிகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தாதீர்கள்.

பணப்புழக்கம் குறைவாக காணப்படும். உங்களின் பிரியமானவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

# வவுனியா கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தை விடுவிக்க இராணுவத் தரப்பில் இணக்கம்

## திலகநாதன் எம்.பி. நாடாளுமன்றத்தில் தகவல்



(கி.வசந்தன்)

15 வருடங்களாக இராணுவத்தின் வசமுள்ள வவுனியா கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தை விடுவிக்க இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்துள்ளார்

நாடாளுமன்றத்தில் கிளீன் சிறிலங்கா விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டத்தில் காணப்படும் கூட்டுறவு பயிற்சி நிலையமானது கடந்த 15 வருடங்களாக இராணுவத்தின் பயன்பாட்டில் காணப்பட்டு வந்தது. கடந்த மாதம் இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்கள் விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்கள்.

வடக்கு மாகண சபை ஆட்சியின் போது வவுனியாவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இதுவரை காலமும் திறக்கப்படாது பூட்டிய நிலையில் காணப்படுகின்றது. எதிர்வரும் காலத்தில் – அதாவது வரும் மாதத்தில் – தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அதனை திறந்து மக்களது பயன்பாட்டிற்கு விடவுள்ளோம்.

வன்னிப் பிரதேசத்தில் மகாவலி கங்கை நீர் இதுவரை வழங்கப்படவில்லை. எமது ஆட்சியில் மகாவலி கங்கை நீர்வளமானது வன்னிக்கும் வழங்க திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் வளமான எதிர்காலத்தையும், வளமான வாழ்க்கையையும் வன்னி மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம். – எனத் தெரிவித்தார்.